[1986 மே 3

அரசு மருத்துவமனைகளில் தற்காலிகத் தொழிலாளர்கள்.

617 — (*வினா எண். 7492) — திரு. சைதை. சா. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் பதிலியாட்கள் எத்தனை வருடங்களுக்குள் நிரந்தரம் செய்யப்படுகிறார்கள்?

(ஆ) சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் காலி யிடங்கள் இருந்தும் பதிலியாட்களை நிரந்தரம் செய்யப்படாத தற்கான காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) நிரந்தரப் பணியிடங்கள் காலி ஏற்படும்போது, பணி மூப்பின் அடிப்படையில் பதிலிப் பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

(ஆ) சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் நிரந்தரப் பணியிடங்கள் பதிலிப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளன.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுமைக்கும் மருத்துவமனைகளில் எத்தனை பதிலியாட்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்? அவர்களை குறைந்தபட்ச அடிப்படையிலாவது வருடத்திற்கு இவ்வளவு பேர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்ற உத்திரவாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கு வார்களா? அதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இருக்கக்கூடிய பிரச்சினைகள் எல்லாம், இந்தப் பணியாளர்களை நிரந்தரமாக்கினால், திடீரென்று ஓரிடத்தில் காலி ஏற்படுகின்ற நேரத்தில், அவர்களை அதிலே அமர்த்த முடியாது. நர்சிங் அசிஸ்டெண்ட், ஸ்டிரெச்சர் பேரர்ஸ், லஸ்கர்ஸ், ஆஸ்பிடல் ஒர்க்கர்ஸ் என்று பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு பிரிவிலும் உள்ளவர்களை நிர்ந்தர

மாக்கினால், அதற்குப் பிறகு ஓரிடத்தில் காலி ஏற்படுகின்ற போது, உதாரணத்திற்கு லஸ்கர் பிரிவில் காலி ஏற்பட்டால், அங்குள்ளவரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆகவேதான், இந்த பதிலியாட்கள் என்ற ஒரு கேடிகரியை வைத்திருக்கிறோம். இது சென்னை மாநகரில் மட்டும் தான் இருக்கிறது. இப்போது இந்த பதிலியாட்கள் இங்குள்ள மருத்துவமனைகளில் மட்டு மல்லாது, பல மாவட்ட, வட்ட மருத்துவமனைகளிலும் நியமிக்கலாம் என்று கருதியிருக்கிறோம். ஏனென்றால், அந்த மருத்துவமனைகளில் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கக்கூடிய காரணத்தினால், இந்த பதிலியாட்கள் நியமிக்கும் முறையை தமிழகம் எங்கும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித் திருக்கிறது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பதிலியாட்கள் மருத்துவக் கல்லூரி, மருத்துவ மனைகளில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது மாவட்ட, வட்ட மருத்துவமனைகளில் எல்லாம் கொண்டு வரப்பட இருக்கின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித் திருக்கிறார்கள். ஆனால், இப்போது 15, 20 ஆண்டுகளாக பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய பதிலியாட்களை, ஆண்டு தோறும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை நிரந்தரமாக்குவது என்ற வகையில் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் மீண்டும் அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யோசனையை இப்போது ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இந்த யோசனையின் அடிப்படையில், 24 பேர்களை இராயப்பேட்டை மருத்துவமனையில் நிரந்தரமாக்கி அதற்காக 24 தற்காலிக பதிலியாட்கள் இடங்களை நிரந்தர இடங்களாக ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த 24 பேர்களில் 7 பேர்கள் மட்டும் 'கம்பேஷனேட் கிரவுண்ட்' அடிப்படையில் Appointment of the legal heirs of the deceased employees on compassionate grounds. அந்த வகையில் பணியாற்றிக்கொண்டிருக் கும்போது இறந்து போகின்றவர்களுடைய துணைவியார்

அல்லது அவரது மகன், மகள் ஆகியோர்களுக்கு 7 இடங்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கின்றன. மற்ற 17 இடங்களுக்கு பதிவி ட்களை நிரந்தரமாக்கி இருக்கிறோம்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னை மருத்துவமனைகளில் பதிலியாட்கள் பல வருஷங் களாக வேலை செய்கிறார்கள். சட்டப்படி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்தால், நிரந்தரமாக்கப்பட வேண்டும். ஆனால், இங்கே பல ஆண்டுகள் ஆகியும், நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். எனவே, அவர்களை நிரந்தரமாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை துரைசாமி அவர்கள் கேட்ட இதே கேள்விக்குத்தான் பதில் அளித்தேன்.

திரு. ஆர். செங்காளியப்பன்: பேரவைத் தலைவர் அர்வகளே, நீண்ட நாட்களாக தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய, எல்லா இடங்களிலும் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளிலே உள்ள தொழிலாளர்கள் பர்மனென்ட் செய்யப்படாமல் இருக்கிறார்கள். நம் அரசே கூட, தொழிற்சாலைகளில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் வேலை பார்த்தால் கன்பார்ம் செய்ய வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், அந்த முறையை ஆஸ்பத்திரிகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கும் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னமாதிரியாக எங்கே பர்மனன்ட் செய்வதற்கு இடம் இருக்கிறதோ அங்கே அவர்களைப் பெர்மனன்ட் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த வேலைகள் ஒரே கேட்டகரி வேலைகள் இல்லை. நான் சொல்லியிருக்கிற மாதிரி Nursin Assistants, Luscars, Stretcher-bearers, Office boys, என்ற பல்வேறு கேட்டகிரிஸ் பல வகையான வேலைகள் இருக்கக் கூடிய காரணத்தினாலே சப்டிட்யூட் ஒர்க்கர்ஸ் என்ற முறையிலே டெம்பரரியாக ஆங்காங்கே காலியாகிறபோது போடுகிறோம்.